

**பாடம் 8** **மே 18-24**

# ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து வெளிச்சம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யாத் 25:8,9,40; எபி 8:1–6; லேவி 16:21, 29–34; லேவி 23:26–32; எபி 9:23–28; யோவான் 7:9,10; மத் 25:1–13; வெளி 11:19.

**மனன வசனம்:** மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ்செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு'. எபி 8:1,2.

1844, அக்டோபர் 22ம் தேதி மாபெரும் ஏமாற்றத்திற்குப்பிறகு, மில்லர் இயக்கத்தினரில் சிலர், 2300 இராப்பகல் குறித்த தீர்க்கதரிசனம் இயேசுவின் இரண்டாம் வருகை குறித்துச் சொல்லவில்லை; மாறாக, பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்து செய்கிற ஊழியம்பற்றிச் சொல்லுவதைப் புரிந்துகொண்டார்கள்.

பரலோகப் பரிசுத்தஸ்தல சுத்திகரிப்பானது பூலோக ஆசரிப்புக்கூடாரத்தில் நடந்த பூலோக சுத்திகரிப்பின் நிறைவேறுதலாக இருக்கிறது. இந்த முக்கிய உண்மையை அறிந்துகொள்வதற்கு, தானி 7ஆம் 8ஆம் அதிகாரங்களுக்கு இடையேயுள்ள ஒற்றுமையைக் கவனிக்கவேண்டும்.

| தானி 7 | தானி 8 |
|---|---|
| பாபிலோன் | ------ |
| மேதிய-பெர்சியா | மேதிய-பெர்சியா |
| கிரேக்கம் | கிரேக்கம் |
| ரோம் | ரோம் |
| பரலோகத்தில் நியாயத்தீர்ப்பு | பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பு |

வருகைக்கு முந்தைய நியாயத்தீர்ப்பைச் சுட்டிக்காட்டின பரிசுத்த ஸ்தல சுத்திகரிப்பின் தன்மையை இதிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. பரலோகத்தில் கிறிஸ்து செய்கிற ஊழியம்பற்றி இந்த வாரம் ஆராய்வோம்.

***மாபெரும் போராட்டம், 22-24ஆம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, மே 25 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# பரலோகப் பரிசுத்த ஸ்தலம்

**யாத் 25:8,9,40; எபி 8:1-6 சொல்கிற இரண்டு பரிசுத்த ஸ்தலங்கள் யாவை?**

1844ம் ஆண்டு அனுபவத்திற்குப்பிறகு, ஆரம்பக்கால அட்வெண்டிஸ்டுகள் வேதவாக்கியங்களை அதிகமாக ஆராய்ந்தார்கள்; இரண்டு பரிசுத்த ஸ்தலங்கள்பற்றி வேதாகமம் சொல்வதைக் கண்டார்கள். ஒன்று, மோசே கட்டினது; மற்றொன்று, பரலோகத்தில் உள்ள அசலான பரிசுத்த ஸ்தலம். 'பரிசுத்த ஸ்தலம்' என்று வேதாகமத்தில் வருகிற வார்த்தைகள், முதலாவது மோசே கட்டின ஆசரிப்புக்கூடாரத்தைச்சுட்டிக்காட்டுகிறது; அது பரலோகத்திலுள்ளவைகளுக்கு 'சாயலாக' இருக்கிறது. இரண்டாவது, பரலோகத்திலுள்ள 'மெய்யான ஆசரிப்புக்கூடாரத்தை' சுட்டிக்காட்டுகிறது; அதைத்தான் பூலோக ஆசரிப்புக்கூடாரம் சுட்டிக்காட்டியது. கிறிஸ்து மரித்தபோது, சாயலான ஆராதனைகள் அர்த்தமற்றதாகின. பரலோகத்திலுள்ள 'மெய்யான ஆசரிப்புக்கூடாரம்'தான் புது உடன்படிக்கையின் பரிசுத்த ஸ்தலமாகும். புது உடன்படிக்கையின் காலத்தில் தானி 8:14 நிறைவேறியதால், அது புது உடன்படிக்கையின் பரிசுத்த ஸ்தலத்தைத்தான் சுட்டிக்காட்டவேண்டும்.

'2300 நாட்களானது 1844ல் முடிவடைந்த சமயத்தில், பல நூற்றாண்டுகளாக பூமியில் பரிசுத்தஸ்தலம் எதுவும் இல்லாமல் இருந்தது. இவ்வாறாக, ''இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்; பின்பு பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படும்'' என்கிற தீர்க்கதரிசனமானது பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தைதான் சந்தேகத்திற்கு இடமின்றி சுட்டிக்காட்டுகிறது'.

வனாந்தர ஆசரிப்புக்கூடாரம் பரலோக ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரியாக இருந்தது. பரலோக ஆசரிப்புக்கூடார ஆராதனைகள், இரட்சிப்புக்கான தேனுடைய திட்டத்தை எடுத்துக்காட்டின. அங்கு இடப்பட்ட ஒவ்வொரு பலியும், சிலுவையில் இயேசு பலியானதைச் சுட்டிக்காட்டின. யோவான் 1:29. கிறிஸ்துவின் அந்தப் பலியால்தான், பாவத்தின் ஆக்கினையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம். நமக்கு பாவமன்னிப்பு கிடைத்திருக்கிறது. நமக்காக கிறிஸ்து இட்ட பலியை ஏற்றுக்கொண்டு, நம் பாவங்களை அறிக்கையிடும்போது, நம் குற்றம் நிவிர்த்தியாகிறது. 1யோவான் 1:9. இயேசு நமக்காக மரித்த தேவ ஆட்டுக்குட்டி; அது மட்டுமல்ல, நமக்காக ஜீவிக்கிற ஆசாரியராகவும் இருக்கிறார்.

'தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்'. எபி 7:25. அவர் பாவத்தின் தோஷத்தை அகற்றி, பாவத்தின் வல்லமையிலிருந்து நம்மை இரட்சிக்கிறார். ரோமர் 8:1-4; 2கொரி 5:21. இயேசு பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் நமக்காக ஊழியம் செய்கிறார். அவரது பரிந்துபேசுதலால், நம் வாழ்க்கையில் பாவத்தின் பிடி தகர்கிறது. பாவ இயல்புகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுகிறோம். கிறிஸ்துவுக்குள் விடுதலை பெறுகிறோம்; அதாவது, பாவத்தின் ஆக்கினையிலிருந்தும், அதன் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுதலை கிடைக்கிறது. விசுவாசத்தோடு கிறிஸ்துவைப் பற்றும்போது, இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுகிறோம்.

**கிறிஸ்து பரலோகத்தில் உங்களுக்காக ஊழியம் செய்கிறார்; அதாவது, உங்களுக்காகப் பரிந்து பேசுகிறார்; இதன் முக்கியத்துவம் என்ன? உங்களுக்கு ஏன் ஒரு மத்தியஸ்தர் தேவை? இந்த உண்மை ஏன் நற்செய்தியாகும்?**

# மகா பரிசுத்த ஸ்தலம்

**பண்டைய இஸ்ரவேலில் பாவநிவாரண நாள் ஏன் முக்கியத்துவம் வாய்ந்த்தாக இருந்தது? லேவி 16:21,29-34; லேவி 23:26-32; எபி 9:23-28.**

வருடத்தின் ஒவ்வொரு நாளிலும் ஆசாரியர்கள் ஊழியம்செய்தார்கள்; ஆனால் எபிரெய மொழியில் யோம் கிப்புர் என்று அழைக்கப்பட்ட பாவநிவாரண நாளில், இஸ்ரவேலர் அனைவரும் ஆசரிப்புக் கூடாரத்தில் கூடுவார்கள். பாவ நிவாரண நாள் குறித்த பிரத்தியேகக் கட்டளைகள் லேவி 16; 23ஆம் அதிகாரங்களில் உள்ளன. வழக்கமாகச் செய்கிற வேலைகளை அன்று நிறுத்தினார்கள். எல்லாரும் உபவாசித்தார்கள். பிரதான ஆசாரியன் மக்களுக்காக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிற சமயத்தில், இருதயங்களை ஆராய்ந்துபார்த்தார்கள். தாழ்மையோடு, மெய்யான மனந்திரும்புதலோடு தேவனைத் தேடினார்கள்.

பாவநிவாரண நாளில் தன்னைத் 'தாழ்மைப்படுத்தாத' எவனும் 'அறுப்புண்டுபோவான்'; தெரிந்து கொள்ளப்பட்ட மக்களில் ஒருவராக அவன் இருக்க முடியாது. லேவி 23:27,29. பாவநிவாரண நாளில், பிரதான ஆசாரியான் ஆட்டுக்கடாவின் இரத்தத்தை பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுசென்று, கிருபாசனத்தின்மேல் தெளித்தான்; பிறகு, பொற்பீடத்தின்மேலும், வெண்கலப் பலிபீடத்தின்மேலும் இருந்த கொம்புகளில் இரத்தத்தைப் பூசினான். இவ்வாறு ஆசரிப்புக் கூடாம் முழுவதையும் சுத்தகரித்தான். இவ்வாறு பிராயச்சித்தம் செய்தபின்பு பிரதான ஆசாரியன் உயிரோடிருந்த ஆட்டுக்கடாவின்மீது கைகளை வைத்து, இஸ்ரவேலரின் பாவங்களை அறிக்கையிட்டான். பிறகு அந்த ஆடு, பாளயத்தில் என்றென்றும் இராதபடிக்கு வனாந்தரத்திற்குள் அனுப்பிவைக்கப்பட்டது.

அன்றாட ஆராதனைகளின்போது, இரத்தமானது ஆசரிப்புக்கூடாரத்திற்குள் கொண்டுசெல்லப்பட்டது; அது, பாவம் பதிவாவதையும் (எரே 17:1), அதை இறுதியில் அகற்றுவதற்கு தேவனே பொறுப்பேற்பதையும் சுட்டிக்காட்டியது. இப்போது, பாவநிவாரண நாளில், அது ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியே கொண்டுவரப்பட்டு, அசாசேல் எனப்படுகிற போக்காட்டின் தலையின்மேல் சுமத்தப்பட்டது; அந்த ஆடானாது, சாத்தானையும், பாவப்பிரச்சனைக்கு அவனே மூலக்காரனாக இருப்பதையும் சுட்டிக்காட்டியது.

இந்த ஆடு திரும்ப வரவே முடியாத தூரத்தில் வனாந்தரத்திற்குள் விடப்பட்டது; எனவே, பாவநிவாரண நாளின் முடிவில், பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட்டது; மக்கள் சுத்திகரிக்கப்பட்டார்கள். பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில், கிறிஸ்து முதலாவது பரிசுத்த ஸ்தலத்திலும், 2300 இராப்பகலின் முடிவான 1844ம் வருடம் முதல் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் ஊழியம்செய்து வருகிறார்.

இந்த மாபெரும் நியாயத்தீர்ப்பிலிருந்து நாம் தப்பலாம்; ஏனென்றால், இயேசு நம பதில் பலியானார். எலன் ஒய்ட் சொல்வது போல, 'நமக்குக் கொஞ்சமும் பங்கில்லாத அவரது நிதியால் நாம் நீதிமான்கள் ஆக்கப்படுகிறோம்'. இந்த நீதி நம்முடைய கணக்கில் எண்ணப்படுவதால், நாம் நம் ஆத்துமாக்களைத் தாழ்த்துகிறோம்; அதாவது, பாவத்தைவிட்டு விலகுகிறோம். பாவத்தை மனதார ஏற்றுக்கொள்ளாமல், நமக்குப் பிடித்த பாவங்களில் நிலைத்திருக்க சாக்குப்போக்குச் சொல்லாமல், கிருபையில் வளர்ந்து, பரிசுத்தமான வாழ்க்கை வாழ்கிறோம்.

---

**நம் வாழ்க்கையில் பாவநிவாரண நாளின் முக்கியத்துவம் என்ன? நாம் வாழ்கிற விதத்தில் அது ஏன் வித்தியாசத்தை உண்டுபண்ணவேண்டும்?**

# நியாயத்தீர்ப்பு வந்தது

**தானி 7:9,10; வெளி 14:6,7 ஆகிய வசனங்களுக்கு இடையேயுள்ள வித்தியாசம் என்ன?**

---

---

வேதாகமம்முழுவதிலும் காணப்படுகிற ஒரு முக்கியக் கருத்து நியாயத்தீர்ப்பு. 'ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்'. பிர 12:14. 'மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டிய' ஒரு காலம் வரவிருப்பதாக இயேசு சொன்னார். மத் 12:36. 'இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்' என்று அப்போஸ்தலனாகிய யோவான் சொன்னார். 1கொரி 4:5. யோவானிடம் தூதன் தேவன் 'நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது' என்றார். வெளி 14:7.

**இயேசு திரும்ப வரும்போது, சகல மனிதர்களின் முடிவு என்னவாயிருக்கும்? யோவானிடம் தெளிவாகச் சொல்லப்பட்டது என்ன?**

---

இறுதி பிரதிபலன்களை வழங்க கிறிஸ்து வருவதால், அவற்றைப் பெறப்போகிறவர்களைத் தீர்மானிக்கிற ஒரு நியாயத்தீர்ப்பு நடைபெறவேண்டும். கிறிஸ்து வந்தபிறகு, இரண்டாம் வாய்ப்பு இல்லை. ஒவ்வொரு மனிதரும் தாங்கள் கிறிஸ்துவின் பக்கமா, எதிர்ப்பக்கமா என்பதை இறுதியாக, நிரந்தரமாகத் தீர்மானிப்பதற்கு போதுமான தகவலைப் பெற்றிருந்தார்கள்.

**இந்த இரண்டுவகை விசுவாசிகளையும் இயேசு வெவ்வேறாகப் பிரித்தக்காட்டுவது ஏன்? மத் 25:1-13.**

---

'நியாயவிசாரணை முடிவடைந்து, யுகங்கள் நெடுகிலும் கிறிஸ்துவின் பின்னடியார்களெனச் சொல்லிவந்தவர்களின் வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீரும் வரையிலும், தவணையின் காலம் முடிவதில்லை; இரக்கத்தின் கதவு மூடப்படுவதுமில்லை. இரட்சகரின் இறுதி ஊழியக்காலத்திலிருந்து, மனிதனின் இரட்சிப்பு எனும் மாபெரும் பணி நிறைவேறும்வரைக்கும் நடப்பதை பின்வரும் வசனம் காட்டுகிறது. 'ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.'[1]

நாம் நியாயத்தீர்ப்பைப் பார்த்து அஞ்சவேண்டியதில்லை. கிறிஸ்துவின் மூலம், நமக்கு பாவமன்னிப்பும், குற்றங்களிலிருந்து விடுதலையும், பக்தியான வாழ்க்கை வாழ்வதற்கான வல்லமையும் கிடைக்கின்றன; நமக்கே இறுதி வெற்றி.

[1] Ellen G. White, The Great Controversy, p. 428.

# மகா பரிசுத்த ஸ்தலம்பற்றிய நற்செய்தி

**பின்வரும் வசனங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கிற நிச்சயமும் தெய்வீக அழைப்பும் என்ன? எபி 4:14-16; 10:19-22.**

'உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுங்கள்', 'ஒருபோதும் நம்பிக்கை இழக்காதீர்கள்', நம் பிரதான ஆசாரியராகிய இயேசுவின்மேல் விசுவாசமாக இருப்பதையே நோக்கமாகக் கொள்ளுங்கள் என்று பவுல் சொல்கிறார். இயேசு நமக்காகத் திறந்துள்ள 'புதிதும் ஜீவனுமான மார்க்கத்தின்' மூலம் விசுவாசத்தோடே நாம் பரலோகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கலாம்.

பிரகாரத்திலிருந்த வெண்கலப் பலிபீடத்தின் கொம்புகளில் இரத்தம் பூசப்பட்டது. மகா பரிசுத்த ஸ்தலத்தில், பொன் தூபவர்க்கப் பீடத்தின் கொம்புகளில் இரத்தம் பூசப்பட்டது. கிருபாசனத்திற்குமுன்பாக இருந்த திரைச்சீலையில் இரத்தம் தெளிக்கப்பட்டது.

இயேசுவின் இரத்தம் ஒவ்வொரு இடத்திலும் வழியை ஆயத்தப்படுத்துகிறது. அது நமக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது; ஏனெனில், இயேசு நம்மை மன்னித்து, நம் பாவங்களை அழிக்கும்போதுமட்டுமே நாம் தேவனோடு மீண்டும் இணையமுடியும். தேவனுடைய இரக்கத்திற்கு முடிவில்லை; அவ்வாறுதான் அவரது நீதியும் இருக்கிறது. இயேசு முதலில் நம் பாவங்களை மன்னிப்பதாகவும், இரண்டாவதாக, அவற்றை அழிப்பதாகவும் உத்தரவாதம் அளிக்காவிட்டால், கிறிஸ்துவின் பலியை நமது மீறல்களுக்கான பரிகாரமாக நியாயம் ஏற்கமுடியாது.

**மாபெரும் போராட்டத்தின் பின்னணியில், வெளி 11:19இன் தரிசனம் எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது? நியாயப்பிரமாணமும் சுவிசேஷமும் பிரிக்க முடியாது என்பதை அது எவ்வாறு காட்டுகிறது?**

தேவபிரசன்னத்தின் சுடரொளி வீசுகிற பிரகாசத்திலும் மகிமையிலும், பிரபஞ்சத்தின் சிங்காசன அறையிலும், தேவ சிங்காசனத்தின்கீழே, உடன்படிக்கை பெட்டிக்குள் தேவ பிரமாணம் இருக்கிறது. அந்த மகா பரிசுத்த ஸ்தலத்தில், தேவ நீதியும் இரக்கமும் வெளிப்படுகின்றன. பூலோக வல்லமை எதுவும் தேவ பிரமாணத்தை மாற்றமுடியாது; அதற்கு பல காரணங்கள் இருக்கலாம்; ஆனால், அது பரலோகத்தில் உடன்படிக்கை பெட்டிக்குள் இருக்கிறது என்பது முக்கியமானது. எபிரெயர் 8:10, 'அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்' என்று சொல்கிறது. பரலோகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் விசுவாசத்தோடு நுழையும்போது, நம் கடந்தகால பாவத்திற்கு மன்னிப்பையும், கிறிஸ்துவின்மூலம் கீழ்ப்படிதலோடு வாழ்வதற்கான வல்லமையையும் பெறுகிறோம். அவரே நமக்காக மரித்தார்; நம் இருதயங்களில் பிரமாணத்தை எழுதுகிறார். இயேசு நம்மை 'முற்றுமுடிய' இரட்சிக்கிறார். எபி 7:25. பாவத்தின் தண்டனையிலும் அதன் வல்லமையிலுமிருந்து நம்மை முற்றிலும் முழுவதுமாக இரட்சிக்கிறார்.

---

**இயேசு நமக்காகப் பரிந்துபேசுகிறார் என்பது எவ்வாறு நற்செய்தியாக இருக்கிறது? நியாயப்பிரமாணமானது நீதியின் தரக்கோலாக இருக்குமானால், சுவிசேஷத்தின் உதவியின்றி அதற்குமுன் நிற்க நமக்கு ஏதாவது நம்பிக்கை இருக்கமுடியுமா?**

# இயேசு, நியாயத்தீர்ப்பில் நம் வழக்கறிஞர்

**பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் ஆசாரியர்கள் செய்த ஊழியத்திற்கும், பரலோகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் இயேசு செய்த ஊழியத்திற்கும் இடையே என்ன வித்தியாசத்தை எபி 10:9-14 வெளிப்படுத்துகிறது?**

பாவத்திற்கான பூரண பலியாக கிறிஸ்து ஒரே தரம் சிலுவையில் மரித்துவிட்டார். பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் அவர் செய்கிற ஆசாரிய ஊழியம் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது. இப்போது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்திருப்பதால், நியாயத்தீர்ப்பில் நமது வழக்கறிஞராக நின்றுகொண்டிருக்கிறார். 1யோவான் 2:1. 'கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்'. எபி 9:28. இயேசு தம் பலியாலும் மத்தியஸ்த ஊழியத்தாலும் பாவத்திற்கு தீர்வு கண்டுள்ளார். இப்போது, அவருடைய 'பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்காகவும்' மீண்டும் வருகிறார். 2தீமோ 4:8.

**இயேசு ஏன் தம்மைப் பின்பற்றும்படி நம்மை அழைக்கிறார்? அவரைப் பின்பற்றும்போது என்ன கண்டுகொள்கிறோம்?**

'இரட்சிப்பின் திட்டத்தில், கிறிஸ்து சிலுவையில் மரித்ததுபோலவே பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் மனிதனுக்காக அவர் பரிந்துபேசுவதும் அத்தியாவசியமானதாக இருக்கிறது. தாம் மரித்தபோது தொடங்கிய அந்த வேலையைத்தான் தாம் உயிர்த்தெழுந்த பிறகு நிறைவேற்றும்படிக்கு பரலோகத்திற்கு ஏறிச்சென்றார். நமது முன்னோடி பிரவேசித்திருக்கிற திரைக்குள்ளாக விசுவாசத்தினால் நாமும் பிரவேசிக்கவேண்டும். எபிரெயர் 6:20. அங்குதான் சிலுவையிலிருந்து புறப்படுகிற வெளிச்சம் பிரதிபலிக்கிறது. அங்கு மீட்பின் இரகசியங்கள் குறித்து ஒரு தெளிவான காட்சியை நாம் பெறலாம். மதிப்பிடமுடியாத ஒரு விலையைச் செலுத்தி மனிதனுடைய இரட்சிப்பை பரலோகம் நிறைவேற்றியிருக்கிறது; மீறப்பட்ட தேவ பிரமாணத்தின் அதிகபட்ச கோரிக்கைகளுக்கு இணையானதாக அந்தப் பலி இருந்தது. பிதாவின் சிங்காசனத்தண்டை செல்வதற்கான பாதையை இயேசு திறந்திருக்கிறார்; விசுவாசத்தோடு தேவனுக்குமுன் வருகிற அனைவருடைய மெய்யான ஆசைகளையும் அவருடைய மத்தியஸ்தல ஊழியத்தின்மூலம் சமர்ப்பிக்கலாம்.'.

இரட்சிப்பின் திட்டமானது மாபெரும் போராட்டத்திற்குத் தீர்வு காண்பதற்கும், சாத்தானின் பிடியிலிருந்து இந்த உலகத்தைக் காப்பாற்றுவதற்குமான முழுத்திட்டமாகும். உதவி தேவைப்படுகிற ஓர் உலகத்திற்கும், உற்றுநோக்குகிற ஒரு பிரபஞ்சத்திற்கும் தேவனுடைய அன்பை இயேசுவின் வாழ்க்கை வெளிப்படுத்தியது. அவரது மரணமானது பாவத்தின் கொடூரத்தை வெளிப்படுத்தி, மனுக்குலம் முழுவதிற்கும் இரட்சிப்பை அருளியது. பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் அவர் செய்கிற மத்தியஸ்த பணியானது, பாவப்பரிகாரத்தின் பலன்களை விசுவாசத்தோடு பெற முயலுகிற அனைவருக்கும் அவற்றை அருளுகிறது.

---

**சிலுவையில் கிறிஸ்து மரித்ததற்கும் பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் பரிந்துபேசுவதற்கும் என்ன தொடர்பிருக்கிறது? இரட்சிப்பின் திட்டத்தில் நியாயத்தீர்ப்பு ஏன் இன்றியமையாதது?**

# மேலும் படிக்க:

நியாயத்தீர்ப்பில் நமக்காக இயேசு செய்கிற ஊழியம்பற்றியும், நமது பங்குபற்றியும் இவ்வாறு விவரிக்கப்படுகிறது: 'இயேசு அவர்களது பாவங்களுக்கு சாக்குப்போக்குகளைச் சொல்லாமல், அவர்கள் மனம் வருந்தினதையும் விசுவாசித்ததையும் காட்டுகிறார்; அவர்களை மன்னிக்கும்படி கோருகிறார்; காயப்பட்ட தம் கரங்களை பிதாவுக்கும் பரிசுத்த தூதர்களுக்கும் முன்பாக உயர்த்திக்காட்டி, அவர்களைப் பேர்சொல்லி அழைத்திருக்கிறேன். அவர்களை என்னுடைய உள்ளங்கையில் நான் வரைந்திருக்கிறேன் என்று கூறுகிறார். "தேவனுக்குக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" சங்கீதம் 51:17. தம் ஜனங்கள்மேல் குற்றஞ்சுமத்துகிறவர்களைப்பார்த்து அவர், "உன்னைக் கடிந்துகொள்வாராக; சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்ட கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக; இவன் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி அல்லவா" என்று சொல்கிறார்'.

'தேவமக்களென அங்கீகரிக்கப்பட்டவர்கள் அழுக்கான வஸ்திரங்களோடு கர்த்தருக்கு முன்பாக நிற்கிறார்கள் என்பது அவரது நாமத்தை அறிக்கையிடுகிற அனைவரும் தங்களைத் தாழ்த்தவும், இருதயத்தை ஆராய்ந்துபார்க்கவும் அவர்களை வழிநடத்த வேண்டும். சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, தங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரிப்பவர்களிடம் தங்களைப்பற்றி தாழ்மையான எண்ணம் காணப்படும். கிறிஸ்துவின் கறைதிரையற்ற குணத்தை எவ்வளவு ஆழமாக ஆராய்கிறார்களோ அவ்வளவுக்கு அவரது சாயலுக்கு ஒத்தவர்களாக மாறவேண்டும்என்கிற ஆசை காணப்படும்; மேலும், தங்களிடம் தூய்மையோ பரிசுத்தமோ அதிகமாக இல்லை என்பதைக் கண்டுகொள்வார்கள். நாம் நம் பாவநிலையை உணர்ந்துகொள்கிற அதே வேளையில், கிறிஸ்துவால்மட்டுமே நமக்கு நீதியும் பரிசுத்தமாகுதலும் மீட்பும் உண்டாகிறதென அவரையே சார்ந்திருக்கவேண்டும். நமக்கு எதிரான சாத்தானின் குற்றச்சாட்டுகளுக்கு நாம் பதிலளிக்க முடியாது. கிறிஸ்துமட்டுமே நம் சார்பாக வல்லமையாக வாதாடமுடியும். நம் புண்ணியங்களை அல்ல, தம் புண்ணியங்களை ஆதாரமாகக் கொண்ட வாதங்களால் குற்றஞ்சாட்டுகிறவனை அவரே வாயடைக்கமுடியும்'.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *இயேசு காயம்பட்ட தம் கரங்களைக் காண்பித்து, பிதாவுக்குமுன் நமக்காகப் பேசுகிறார் என்பது நம்மில் எத்தகைய உணர்வுகளை உண்டாக்குகிறது? நியாயத்தீர்ப்பில் ஏன் இதுமட்டுமே நம் ஒரே நம்பிக்கையாக இருக்கிறது?*

2 *நாம் பாவநிவாரண நாளில் வாழ்கிறோம். பாவநிவாரணம் என்பது தொலைந்து போனவர்களை இரட்சிப்பதற்கு தேவன் செய்கிற கிரியையாகும். அப்படியானால், பாவிகளை இரட்சிப்பதற்கு தேவன் செயல்படுகிற நாள் எந்த நாளாக இருந்தாலும் அது நற்செய்திதானா?*

3 *'கிறிஸ்துமட்டுமே நம் சார்பாக வல்லமையாக வாதாடமுடியும். நம் புண்ணியங்களை அல்ல, தம் புண்ணியங்களை ஆதாரமாகக் கொண்ட வாதங்களால் குற்றஞ்சாட்டுகிறவனை அவரே வாயடைக்கமுடியும்' என்று எலன் ஒய்ட் எழுதுகிறார். இந்த நம்பிக்கையை நீங்கள் எவ்வாறு சொந்தமாக்கலாம்?*

# ஆலயத்திலிருந்து ஓடுதல்: பகுதி 1

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

அனெலியாவுக்கு ஆலயத்திற்குச் செல்லவே பிடிக்காது. அவள் குடும்பத்தினர் கிறிஸ்தவ மதமல்லாத ஒரு உலகமதத்தைச் சேர்ந்தவர்கள். விடுமுறை நாட்களில் தன் தொழுகை ஸ்லத்திற்குச் செல்லுவார்; மிருகங்களைப் பலியிடுவார். இவ்வாறு 40 வருடங்களுக்கு மேலாகச் செய்துவந்தார். அவருடைய கணவனையும், 20 வயது மகன் ரோஸெனையும் முன் பின் தெரியாத ஒரு நபர் சந்தித்து, அவர்களுக்கு ஒரு வேதாகமத்தைக் கொடுத்ததை அறிந்த போது அதிர்ச்சியடைந்தார். "இதை வாங்கிக் கொள்ளுங்கள், இன்று சாயங்காலம் கூட்டத்திற்கு வாருங்கள்" என்று சொன்னார். சிற்றுண்டிகளும் வழங்கப்படுமெனக் கூறினார்.

அதை அறிந்தபோது வீட்டில் அனெலியா கோபமடைந்தார். "அங்கு என்னால் வர முடியாது. என் மதம் வேறு" என்று சொன்னார். ஆனால் ரோஸென் சபைக்குச் செல்ல விரும்பினான். "வாருங்கள், அங்கு சாப்பிடலாம், அங்கு என்ன சொல்லுகிறார்களெனக் கேட்கலாம்" என்று சொன்னான்.

அகதிகளான அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரும், அந்த ஐரோப்பிய பட்டணத்தில் கூட்டத்திற்குச் சென்றார்கள். சபை அங்கத்தினர்கள் அவர்களை வரவேற்றார்கள்; தேநீரும் கேக்கும் வழங்கினார்கள். கூட்டத்தில் இயேசுவைப் பற்றி அனெலியா கேள்விப் பட்டார்; ஆனால் பேசப்பட்ட வார்த்தைகள் அவருக்குப் புரியவில்லை. 'எதைப் பற்றிப் பேசுகிறார்கள்?' என்று யோசித்தார். அவருடைய மத்த்தைச் சேர்ந்த எவரும் முதன்முதலாக வேதாகமம் பற்றிக் கேள்விப்படும்போது அவ்வாறுதான் நடந்திருப்பார்.

ஆனால் ரோஸெனுக்கு கூட்டம் பிடித்திருந்தது. பிறகு அந்தக் கூட்டத்திற்கு வரும்படி அழைத்த பவுல் என்பவருடன் சேர்ந்து வேதாகம விஷயங்களைக் கற்றுக்கொண்டான். பிறகு, தான் ஞானஸ்நானம் எடுக்கிற தினத்தன்று ஆலயத்திற்கு வரும்படி அம்மாவை அழைத்தான். ஆலயம் செல்ல அனெலியா கொஞ்சமும் விரும்பவில்லை. "ஞானஸ்நானம் என்றால் எனக்கு என்ன வென்று தெரியாது, நான் வரவில்லை" என்று சொன்னார்.

பிறகு அனெலியாவின் குடும்பத்தினர் தாங்கள் தங்கியிருந்த வாடகை வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். வாடகை கொடுக்க பணமிருந்தாலும், வாடகை வீடு கிடைக்கவில்லை. சபை அங்கத்தினர்களும் தேடினார்கள்; ஆனால் பயனிலில்லை. சிறுவர் ஓய்வுநாள் அறையில் தற்காலிகமாகத் தங்குவதற்கு இடமளித்தார்கள்.

ஆலயத்திற்குச் செல்லுவது அனெலியாவுக்கு கொஞ்சமும் பிடிக்காது. ஆனால் இப்போது வேறு வழியில்லை. ஆலயத்தில் தங்கினார்கள்.

அந்தச் சமயத்தில் பவுல் அவர்களைச் சந்தித்து, வேதாகம விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

ஓய்வுநாட்களில் ஆராதனைகளில் கலந்து கொள்ள பவுல் அவர்களை அழைத்தார். அனெலியா அன்று எங்காவது சென்றுவிடுவார். ஆராதனை ஆரம்பமானதுமே, வாசல் வழியாக நழுவிவிடுவார். ஆனால் அவரது 22 வயது மகன் சத்தியத்தால் தொடப்பட்டார். ஞானஸ்நானம் பெற்றார். அவர்களுக்கு புதிதாக ஒரு வீடு கிடைத்த பிறகு, அனெலியாவின் இரண்டு மகன்களும் அவளிடம் இயேசுவை ஏற்றுக்கொள்ளுமாறு சொல்ல ஆரம்பித்தார்கள்.